# அலகு II

## பண்டைய இலக்கியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியம் எனப்படும். இவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற இரண்டு பிரிவுகளில் மொத்தம் 18 நூல்களைக் கொண்டுள்ளன. அவை அக இலக்கியங்கள், புற இலக்கியங்கள் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. அக இலக்கியம் என்பது பண்டையத் தமிழரின் காதல் வாழ்க்கையைப் பற்றியது. புற இலக்கியம் என்பது வீரம், கொடை முதலான புற வாழ்க்கையைச் சித்திரிப்பது. காதலும் வீரமும் பண்டைத் தமிழர் வாழ்வியலின் அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளாக விளங்கின. இங்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ள சங்கப்பாடல்களும் புறநானூற்றுக் கதையும் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்ப்பதோடு, திறனாய்வுச் சிந்தனையை விரிவுபடுத்தவும், மேலும் தகவல்களைத் திரட்டி ஒப்பிட்டுப் பார்க்கும் திறனை மேம்படுத்தவும் உதவும்.

# 4. பழம்பாட்டுகள்

பண்டை இலக்கியங்களை அக இலக்கியம், புற இலக்கியம் என்று பார்த்தோம். அவற்றுள் புற இலக்கியங்களில் ஒன்று புறநானூறு. பண்டைத் தமிழரின் வீரம், கொடை, கல்வி மற்றும் பிற சமூக வாழ்க்கையைப் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது புறநானூறு; அகவல் பாக்களால் இயன்றது. இது எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறும் ஒரு தொகை நூலாகும். புற நானூற்றில் இடம் பெற்றுள்ள பாடல் ஒன்று இங்குத் தரப்படுகிறது.

பழந்தமிழரின் போர்முறை, ஈகை, வீரம், கொடை, பழக்கவழக்கங்கள் போன்ற புறச் செய்திகளைப் பற்றி இந்நூல் கூறுகிறது. புறத்திணையியலில் புறப்பொருள் 12 திணைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பன. பாடப் பகுதியாக இடம்பெற்றுள்ள பாடல், பொதுவியல் திணையில் அடங்குகின்ற பொருண்மொழிக் காஞ்சித் துறையைச் சார்ந்தது. இப்பாடலை எழுதியவர் கணியன் பூங்குன்றனார் ஆவார்.

## அ. புறநானூறு

**யாது மூரே; யாவருங் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலுந் தணிதலும் அவற்றோ ரன்ன;**
**சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே; மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ, யானாது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**
**காட்சியிற் றெளிந்தன மாகலின், மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.**

**–கணியன் பூங்குன்றனார்**



தன் திருமணத்தின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் செல்கின்றான் தலைவன். நெடுநாளாகியும் அவன் திரும்பி வரவில்லை. இதனால், வருந்தித் தளர்ந்து தலைவி, தோழியைப் பார்த்து 'அவனது நீண்ட பிரிவைத் தாங்கும் வலிமை எனக்கு இல்லை' என வருந்திக் கூறுகின்றாள். குறிஞ்சிநிலத் தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாக அமைந்த பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

### ஆ. குறுந்தொகை

**கான மஞ்ஞை அறையீன் முட்டை**
**வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்**
**குன்ற நாடன் கேண்மை யென்றும்**
**நன்றுமன் வாழி தோழி! யுண்கண்**
**நீரொடு ஓராங்குத் தணப்ப**
**உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.**

**- கபிலர்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுக் கருத்தை உணர்த்தும் பாடல்கள் பிற பண்டைய இலக்கியங்களிலும் உள்ளன. அவற்றுள் ஒன்று திருக்குறள். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் சங்கம் மருவிய காலத்துப் புலவர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டது திருக்குறள். வாழ்க்கை உண்மைகள் அனைத்தையும் இரண்டே அடிகளில் கூறுகிறது. இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை என்பர். இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எந்நாட்டவர்க்கும், எவ்வினத்தவர்க்கும் பொதுவானது. இதனை மலையாள மொழியில் பத்துக்கும் மேற்பட்ட அறிஞர்கள் மொழிபெயர்த்துள்ளனர். அறத்துப்பாலில் 'வாய்மை' என்ற அதிகாரத்தில் இடம்பெறும் பாடல்கள் வருமாறு:

### இ. வாய்மை

1. வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.
2. பொய்மையும் வாய்மை இடத்த; புரைதீர்ந்த
   நன்மை பயக்கும் எனின்.
3. தன்நெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
   தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
4. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.
5. மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு
   தானஞ்செய் வாரின் தலை.
6. பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை,
   எல்லா அறமும் தரும்.
7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
   செய்யாமை செய்யாமை நன்று.
8. புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
   வாய்மையால் காணப் படும்.
9. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
   பொய்யா விளக்கே விளக்கு.
10. யாம்மெய்யாக் கண்டவற்றுள், இல்லைஎனைத் தொன்றும்
    வாய்மையின் நல்ல பிற.

திருக்குறள்

- திருவள்ளுவர்

புற இருள் போக்கும் விளக்கெல்லாம் விளக்கல்ல; அக இருள் போக்கும் வாய்மை என்பதே விளக்காகும். இதே கருத்தை ஏலாதி என்னும் அறநூலும் உணர்த்துகிறது.

ஏலாதி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஏலாதி என்பதற்கு ஏலம் ஆதியாக (முதலாக) என்பது பொருள். ஏலம் முதலான ஆறு மருந்துப் பொருள்களின் பொடியைச் 'சூரணம்' என்பர். ஏலம் ஒரு பங்கு, இலவங்கம் இரண்டு பங்கு, சிறுநாவல் பூ மூன்று பங்கு, மிளகு நான்கு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என இவற்றை இடித்துப் பொடியாக்கி மருந்து செய்வர். அதற்குப் பெயர் ஏலாதி. அது உடல் நோயைப் போக்கும். அது போன்று உளநோயைப் போக்கும் அறுவகை உண்மைகளை ஒவ்வொரு பாடலிலும் அமைத்துப் பாடப்பெற்ற 80 பாடல்களைக் கொண்ட நூல் ஏலாதி.

தன் முன்னால் இருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து இவ் அறவுரைகளைக் கூறுவது போன்ற அமைப்பில் இப்பாடல்கள் ஆக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் **கணிமேதாவியார்.** இவர், திணைமாலை நூற்றைம்பது என்ற நூலையும் பாடியுள்ளார். வாய்மையை உணர்த்தும் இரு ஏலாதி பாடல்களைக் காண்போம்.

**ஈ. ஏலாதி**

**1. பொய்யுரையான், வையான், புறங்கூறான் யாவரையும்**
**மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான் - எய்யுரையான்**
**கூந்தன்மயி லன்னாய்! குழீஇயவான் விண்ணோர்க்கு**
**வேந்தனா மிவ்வுலகம் விட்டு.**

**2. மையேர் தடங்கண் மயிலன்னாய் சாயலாய்!**
**மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர் - பொய்யே**
**குறளை கடுஞ்சொற் பயனிலசொ னான்கும்**
**மறலையின் வாயினவா மற்று.**

**- கணிமேதாவியார்**

**விடை காண்போம்**

- புறநானூறு,குறுந்தொகை-குறிப்பு எழுதுக.
- பொதுவியல் என்றால் என்ன?
- புறத்திணைகள் எத்தனை? அவை யாவை?
- திறவோர் காட்சியில் தெளிந்தது யாது?
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் திரண்ட கருத்தை எழுதுக.
- தன்னெஞ் சறிவது பொய்யற்க - ஏன்?
- 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'-யார்?
- பொய்மையும் வாய்மையாவது எப்போது?
- 'வாய்மை' என்னும் அதிகாரக் குறட்பாக்களின் கருத்துகளைத் தொகுத்துரைக்கவும்.
- அறிவுடைய சான்றோர் எத்தகு சொற்களைக் கூறுவர்?
- அறிவற்ற சிறியோர் வாயினின்று பிறக்கும் சொற்கள் எத்தகையன?
- 'ஏலாதி' பற்றிக் குறிப்பு வரைக.

# 5. எலியும் புலியும்

'எலியும் புலியும்' என்னும் இப்பாடப்பகுதி நா. பார்த்தசாரதியின் 'புறநானூற்றுக் கதைகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்துச் சோழ அரசன் நல்லுருத்திரன் புலியைப் போன்ற நண்பர்கள் வேண்டுமா? எலியைப் போன்ற நண்பர்கள் வேண்டுமா? என்று நம்மை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறான். அதற்கு விடைகூறும் நோக்கில் இக்கதை அமைந்துள்ளது. 'குறிஞ்சி மலர்', 'பொன் விலங்கு', 'சமுதாய வீதி', 'சத்திய வெள்ளம்' போன்ற நாவல்களைப் படைத்துள்ளார். இலக்கிய இலக்கணம் தொடர்பான நூல்களையும் எழுதியுள்ளார்.

"உங்களுக்குப் புலியைப்போன்ற நண்பர்கள் வேண்டுமா? எலியைப்போன்ற நண்பர்கள் வேண்டுமா?" என்று நம்மை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறான் பழைய காலத்துச் சோழ அரசன் நல்லுருத்திரன்.

"புலியைப்போன்ற நண்பர்கள் என்றால் என்ன? எலியைப்போன்ற நண்பர்கள் என்றால் என்ன? அதைப்பற்றியே எங்களுக்கு முதலில் தெரியாதே! தெரிந்துகொண்ட பின்பல்லவா நாங்கள் உன் கேள்விக்கு விடை சொல்ல முடியும்!".

"பரவாயில்லை! என்னோடு வாருங்கள். புலியின் வாழ்க்கையையும் எலியின் வாழ்க்கையையும் உங்களுக்கு நிதரிசனமாகக் காட்டுகிறேன்!"

"ஐயையோ! புலியைப் பார்க்க வேண்டுமானால் காட்டுக்கல்லவா போக வேண்டும்?"

"ஆம்! காட்டுக்குள்தான் போக வேண்டும்! காட்டில்தான் மனிதனின் ஆதி நாகரிகம் தோன்றியது. காட்டில்தான் வாழ்வின் ஆதி உண்மைகள் அடங்கியிருக்கின்றன. அங்கே போய்த்தான் இந்த மாதிரி புதிர்களை விடுவித்துக் கொள்ள முடியும்."

சோழன் நல்லுருத்திரனைப் பின்பற்றித் துணிவாகக் காட்டுக்குப் போகிறோம் நாம். புலியையும் எலியையும் பற்றித் தெரிந்து கொள்ளத்தான்! புலியும் எலியும் நமக்குப் புதியவை அல்ல. அவற்றைப் பற்றி இந்த அரசன் நமக்குச் சொல்லி விளக்கப் போகின்றானே உண்மைகள்; அவைதாம் முற்றிலும் புதியவை.

இதோ ஒரு பெரிய நெல் வயல். முதிர்ந்து தலைசாய்த்த நெற்கதிர்கள். இடையே வரப்பில் துள்ளி ஓடுகிறதே! அது என்ன? அருகில் நெருங்கிப் பார்க்கிறோம். அது ஓர் எலி. என்ன செய்கிறது? வயலிலுள்ள நெற்கதிர்களை அறுத்துத் தன் பற்களினால் கடித்துத் துண்டிக்கிறது. வரப்போரத்திலுள்ள பொந்தில் ஒவ்வொரு கதிராகக் கொண்டுபோய் வைத்துவிட்டு வருகிறது. திருட்டு வேலை! திருட்டுச் சொத்து! திருடிக்கொண்டு போய், தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் பொந்துக்குள் கொண்டுபோய் நிரப்பி வைக்கிறது.! எத்தனை அழகிய நெற்கதிர்கள் இப்படிப் பாழாகி விட்டன! இன்னும் பாழாகப்போகின்றவை எத்தனையோ? – பயனற்ற கொலை வாழ்க்கை. இதுதான் எலியின் வாழ்வு! திருட்டுத் தனத்தோடு கூடிய அர்த்தமில்லாத அற்ப வாழ்வு. மனிதர்களிலும் இப்படி எலிகள் இருக்கின்றனர். பிறரை ஏமாற்றித் தன்னையும் ஏமாற்றிக் கொள்கின்ற மனித எலிகள் அநேகம்! இப்படிப்பட்ட எலிகள் நமக்கு நண்பர்களாகலாமா? கூடாது! கூடாது! கூடவே கூடாது! வாழ்க்கை என்றால் அதற்கு மனம் வேண்டும். அந்த மனத்தில் மானம் வேண்டும்! மனமும் அதில் மானமும் இல்லாமல் என்ன வாழ்வு வேண்டிக்கிடக்கிறது? மானமில்லாத சிறிய கேவலமான திருட்டு முயற்சியில் வாழ முயல்வதைக் காட்டிலும் சாவது எவ்வளவோ உயர்வாக இருக்குமே! போகட்டும்!

எலியின் கதையைப் பார்த்தாகிவிட்டது. இனிமேல் புலியின் கதையைப் பார்ப்போம். புலியை வயலில் பார்க்க முடியாதே! இன்னும் கொஞ்சம் அடர்ந்த காட்டிற்குள் போவோம். அதோ ஓர் அடர்ந்த புதர். அந்தப் புதருக்கு எதிரே உள்ள மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொள்ளுவோம்!

ஆ! அதென்ன? அந்தப் புதருக்கு அருகில் ஏதோ ஒன்று அசைகின்றதே? அது ஒரு காட்டுப் பன்றி. அங்கே புதருக்கு அருகில் மேய்ந்து கொண் டிருக்கிறது. சிறிது நேரமாயிற்று. புதருக்குள் செடி கொடிகள் அசைகின்றன. ஏதோ சலசலப்பு உண்டா கிறது. காட்டுப்பன்றி மிரண்டு போய்த் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்கிறது. புதரில் சலசலப்பு அதிகமா கின்றது.

அடுத்த வினாடி! காடே அதிர்ந்து போகும்படி பெரிய உறுமல் சத்தம் புதருக்குள் இருந்து கிளம்பு கின்றது. காட்டுப்பன்றி மிரண்டு ஓட அடியெடுத்து வைப்பதற்குள் புதருக்குள் இருந்து பெரிய புலியொன்று அதன்மீது வேகமாக மோதிப் பாய்கிறது. காட்டுப்பன்றி யின் குரூரமான அலறலும், பசி மிக்க புலியின் போர் முழக்கமும் காட்டையே கிடுகிடுக்கச் செய்கின்றன. காட்டுப்பன்றி புலியைத்தாக்க, புலி காட்டுப்பன்றியைத் தாக்க ஒரே ரத்தக் களரியாயிற்று. புலிக்கு வலிமை அதிகம். போதாக் குறைக்கு அப்போது அதற்குப் பசி நேரம் வேறு. காட்டுப்பன்றியின் ஆற்றல் அதற்கு முன் எடுபட வில்லை. தலையைப் பிளந்து தன் வெறிக்குக் காட்டுப்பன்றியை இரையாக்கிக் கொள்ளத் துடித்தது புலி! காட்டுப்பன்றி கொஞ்சம் கொஞ்சமாக உயிரொடுங்கி ஈனஸ்வரத்தில் அலறிக் கொண்டு புலியின் இடப்பக்கம் பொத்தென்று வேரற்ற மரம்போல் விழுந்து விட்டது.

என்ன ஆச்சரியம்! புலிக்கு நல்ல பசியாக இருந்தும் அது காட்டுப்பன்றியை உண்ணவில்லை. காட்டுப்பன்றி இடப்பக்கம் விழுந்திருக்கிறது -என் பதைப் பார்த்துக்கொண்டே பேசாமல் போய்விட்டது. புலியினிடத்தில் மானம் நிறைந்த ஒரு பண்பு உண்டு. தான் கொன்ற பிராணி தன் வலப்பக்கத்தில் விழுந் தால்தான் உண்ணும். இடப்பக்கம் விழுந்தால் தனக்குத் தோல்வி என்று கருதி உண்ணாது! இன் னும் சிறிது நேரம் அங்கே தாமதித்துப் பார்க்கிறோம். புலி காட்டுப்பன்றியை உண்ணாமல் அங்கேயே வட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது. சிறிது நேரத்தில் அந்தப் பக்கமாக ஓர் ஆண்யானை வருகிறது. புலி பதுங்கிப் பதுங்கி அந்த ஆண்யானையின் மேலே குபீ ரென்று பாய்கிறது. ஆண்யானையை அடித்துத் தள் ளுகிறது. இறந்து போன காட்டுயானை புலியின் வலப்பக்கம் விழுகிறது. புலி வெற்றி மகிழ்வுடன் அந்தக் காட்டுயானையை உணவாக உண்கிறது. ஆகா இந்தப் புலிக்குத்தான் எவ்வளவு மானப்பண்பு? மனம் என்றால் இதில் இப்படி அல்லவா ஒரு மானப் பண்பு அமைந்திருக்க வேண்டும்! இதுதான் புலியின் கதை. இப்போது சொல்லுங்கள்! திருடி ஒளித்து வைக் கும் எலி போன்ற நண்பர்கள் வேண்டுமா? மானமே பெரிதென்று எண்ணி உணவை உண்ண மறுக்கும் புலி போன்ற நண்பர்கள் வேண்டுமா? - சோழ அரசன் நம்மை நோக்கி கேட்கிறான். நாம் என்ன சொல்லு வோம்? சந்தேகம் என்ன? புலி! என்றுதான் சொல்லு வோம்.

**விளைபதச் சீறிடம் நோக்கி விளைகதிர்**
**வல்சி கொண்டு, அளைமல்க வைக்கும்**
**எலிமுயன் றனைய ராகி உள்ளதம்**
**வளன்வலி உறுக்கும் உளமிலா ளரோடு**
**இயைந்த கேண்மை இல்லா கியரோ!**
**கடும்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென,**
**அன்றவண் உண்ணா தாகி வழிநாள்**
**பெருமலை விடரகம் புலம்ப, வேட்டெழுந்**
**திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்**
**புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து**
**உரனுடை யாளர் கேண்மையொடு**
**இயைந்த வைகல் உளவா கியரோ!**

(புறநானூறு )

சிறுமையைச் செய்து சிறுமையை அடையும் எலி! சிறுமையை வெறுத்து பெருமையை அடை யும் புலி! இரண்டில் புலிதானே சிறந்தது?

**- நா. பார்த்தசாரதி**

**விடை காண்போம்**

- வயல் வரப்பில் எலி என்ன செய்து கொண்டி ருந்தது?
- எலியின் செயல் ஆசிரியருக்கு எதை உணர்த் துவதாக அமைந்திருந்தது?
- புலி பன்றியைத் தாக்கிய செயலை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
- ‘சிறுமையைச் செய்து சிறுமையை அடையும் எலி’ - ஆசிரியர் விளக்கும் உண்மை யாது?
- ‘சிறுமையை வெறுத்துப் பெருமையை அடை யும் புலி’ என்று ஆசிரியர் கூறக் காரணம் என்ன?
- எத்தகைய நட்பு சிறந்தது என ஆசிரியர் கூறு கிறார்?
- எலியைப் போன்ற நண்பர்களின் பண்பு யாது?

## கற்றல் செயல்பாடுகள்

### ❖ அகராதி பார்த்துப் பொருள் எழுதுவோம்

- மஞ்ஞை
- குருளை
- முனிவு
- புணை
- இன்னா
- முசு
- கேண்மை
- கேளிர்
- தணிதல்
- மாட்சி

### ❖ இடஞ்சுட்டிப் பொருள் விளக்குவோம்

- நன்றுமன் வாழிதோழி
- உள்ளா தாற்றல் வல்லுவோர்க்கே
- 'யாது மூரே யாவருங் கேளிர்'
- 'பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்தல் அதனினும் இலமே'
- 'தன் நெஞ்சே தன்னைச் சுடும்'
- 'புறந்தூய்மை நீரான் அமையும்'

### ❖ நயம் பாராட்டுவோம்

- "கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளையுருட்டும்"

என்னும் அடிகளின் நயத்தைப் பாராட்டி எழுதுக.

### ❖ வடிவமாற்றம் செய்வோம்

- பாடப்பகுதியை உரையாடலாக மாற்றி எழுதுக.

### ❖ எனது குறிப்பேடு

- அகராதி

குரங்கைக் குறிக்கும் கீழ்வரும் சொற்களை அகரவரிசைப் படுத்தி 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.

◆ முசு ◆ கவி ◆ கபி
◆ மார்க்கடம் ◆ மந்தி ◆ காரூகம்

- பாடப்பகுதியிலுள்ள குறட்பாக்களை மனப்பாடம் செய்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுங்கள்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களை அறிந்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.
- "யாது மூரே யாவருங் கேளிர்" எனத் தொடங்கும் பாடலை உணர்ச்சிப் பாவத்தோடு பாடி மனப்பாடம் செய்து சொல்நயம், பொருள் நயம் அறிந்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.

### ❖ எனது நூலகக் குறிப்பேடு

- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் பெயர்களைத் திரட்டி 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுக.
- பாடப்பகுதியில் வரும் மானம், நட்பு ஆகிய பண்புகள் திருக்குறள், நாலடியார், புறநானூறு போன்ற நூல்களில் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதை ஒப்பிட்டு 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுக.

### ❖ எனது படைப்பாற்றல் ஏடு

- புலி, எலி, யானை, சிங்கம் ஆகிய விலங்குகளைக் கதாபாத்திரங்களாக்கிக் கதை எழுதுக.
- உங்களுக்கு நன்கு தெரிந்த புறநானூற்றுப்பாடல் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை எழுதுக.
- நெல் வயலின் காட்சியைப் பற்றி ஓர் அழகான கவிதை படைக்கவும்.
- புலியியைப் பற்றிய ஒரு கவிதை புனைக.

### ❖ ஓவியம் தீட்டுவோம்

- மயில் ஈன்ற முட்டையைக் குரங்குக் குட்டி உருட்டி விளையாடுகின்ற காட்சியை ஓவியமாகத் தீட்டுக.

### ❖ இலக்கணக் குறிப்பு எழுதுவோம்

- ஆடுமுசு
- கானமஞ்ஞை
- ஈன்முட்டை
- நாடன் கேண்மை

### ❖ வாக்கியத்தில் அமைப்போம்

- நிதரிசனமாக
- சலசலப்பு
- கிடுகிடுக்கச் செய்தல்
- வேரற்ற மரம் போல

### ❖ கலந்துரையாடுவோம்

- எலிகளால் ஏற்படும் தீமைகளைக் குறித்தும், அவற்றை ஒழிக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் கலந்துரையாடல் நிகழ்த்தலாம் அல்லவா?

❖ சொற்பொழிவாற்றுவோம்

- பறவைகள், விலங்குகள் இவற்றின் விந்தையான செயல்களைக் குறித்து இளைஞர் தினவிழாவில் ஒரு சொற்பொழிவு நடத்துக.

❖ கட்டுரை எழுதுவோம்

- 'வனவளத்தைக் காப்போம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி, சிறந்த கட்டுரையைப் பள்ளிக் கையெழுத்து இதழில் வெளியிடுக.

❖ சுவரொட்டி / பத்திரிகைச் செய்தி தயாரிப்போம்

- தமிழிலக்கிய மன்றம் சார்பாக நடபெறும் நிகழ்ச்சிக்குச் சுவரொட்டி தயாரிக்க.
- 'எது இலக்கியம்?' என்ற தலைப்பில் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சி குறித்துப் பத்திரிகைச் செய்தி தயாரிக்க.

❖ முத்திரை வாக்கியம் அமைப்போம்

சமூகத்தேவை, சமூக ஒற்றுமை இவற்றை வலியுறுத்தும் முத்திரை வாக்கியங்களைத் திரட்டிச் சுவரொட்டி தயாரிக்க.

**மாதிரி** : மழைநீர் சேமிப்போம்! வளர்ப்போம்!

❖ தொடர் விளக்கம் காண்போம்

- **எய் உரையான்** :
  தன்னுடைய நண்பர்களிடம்கூடத் தன் வறுமை நிலையை வெளிப்படுத்திக் கூறாதவன்
- **வான் குழீஇய விண்ணோர்** :
  வானுலகில் வாழும் தேவர்கள்
- **மெய்யுரையான்** :
  பிறர் துன்பத்தைப் போக்குவதற்காக நடந்த உண்மையைச் சொல்லாதவன்
- **கூந்தல் மயிலன்னாய்** :
  விரிந்ததோகைபோன்ற கூந்தலை உடையவள்

❖ புதுக் குறள் படைப்போம்

- 'வாய்மை' அதிகாரக் குறட்பாக்களின் கருத்து வரும்படிச் சொந்தக் குறள் எழுதுக,

**மாதிரி:**

பொய்ம்மை ஒழிக்க எந்நாளும் அத்தன்மை
எல்லா வளமுந் தரும்.

❖ திரட்டுவோம்

திருக்குறளை ஆங்கில மொழியில் ஜி.யு.போப், எல்லிஸ் பிரபு, ஜான் லாசரஸ் போன்றோர் மொழி பெயர்த்துள்ளனர். இது போலப் பிறமொழிகளில் மொழி பெயர்த்தவர்களின் பெயர்களைத் திரட்டுக.

❖ விவாதிப்போம்

- வாய்மையா? பொய்மையா?
  - ◆ ஒருவன் செல்லும் ஊர் மிகத் தொலைவிலிருந்தும் அண்மையில் இருக்கிறதென்று அவனுக்கு வழிகாட்டுதல்.
  - ◆ மருத்துவர் நோயாளியை நோக்கி அவன் நோய் மிகக் கடுமையாயிருந்தும் வரவரக் குணமாகி வருகிறது என்று பொய் கூறுதல்.
  - ◆ வீண் செலவு செய்யும் மகனிடம் தந்தை பணத்தை வைத்துக்கொண்டு இல்லையென்று கூறுதல்.

❖ தொடர்பு படுத்துவோம்

- கீழ்க்காணும் கவிதை வரியோடு பொருள் தொடர்புடைய குறட்பாக்களைக் கண்டு பிடித்து எழுதுக.
  - ◆ "நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டா".

❖ ஒப்பு நோக்குவோம்

'வாய்மை' அதிகாரக் குறட்பாக் கருத்துகளை ஒன்பதாம் வகுப்பில் கற்ற அரிச்சந்திர புராணத்துடன் ஒப்பிட்டு விளக்குக.

❖ மேற்கோள் அட்டை தயாரிப்போம்

**மாதிரி:**

- "அகந்தூய்மை வாய்மையால் அமையும்".
- "வாய்மையின் நல்ல பிற இல்லை".

இவைபோன்ற பொருள் பொதிந்த திருக்குறள் தொடர்களை அழகாக எழுதி வகுப்பறைச் சுவரில் பதிக்கவும்.

❖ அறிந்து கொள்வோம்; திரட்டுவோம்

தற்போது நடுவண் அரசு திருவள்ளுவர் பெயரில் ரயில்வண்டி விட்டுள்ளது. வள்ளுவருக்குப் பெருமை சேர்க்கும் இதுபோன்ற செய்திகளைத் திரட்டுக.

### வாசித்துப் பழகுவோம்

- கீழ்வரும் பாடலை வாசித்துப் பழகுவோம்.

◆"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முனை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே".

◆"புலமிக்கவரை புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் – நலமிக்க
பூம்புனல் ஊர; பொதுமக்கட் (கு) ஆகாதே
பாம்பறியும் பாம்பின கால்".

### வாசித்துக் கருத்தறிவோம்

இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களில் வாழ்க்கையைப் புலப்படுத்துகிறது. அது மனிதனது ஆன்மாவையும் அவன் கருத்துகள், உணர்ச்சிகள், தலை நோக்கங்கள் முதலியவற்றையும் சொல் வடிவிலே காட்டும் குறிப்பாகும். அதன் சிறப்பியல்புகள் கலையழகும், குறிப்பாற்றலும் நிலைபேற்றுப் பண்புகளும் ஆகும். அதன் அளவுகோல்கள் அதனுடைய அகிலத்துவமும் அதன் தனிப்பட்ட நடை அமைப்பும் ஆகும். ஆன்மாவின் உண்மைச் சரித்திரமாக இருப்பதும் அதுவே. அதன் பயனாவது நம்மை இன்புறுத்துதலே அன்றி, மனிதனின் உண்மை இயல்பை அறிவுறுத்தலும் ஆகும். அதாவது மனிதனது செயல்களைக் காட்டிலும் அவனது ஆன்ம இயல்பினை உணர்த்துவது தான் அதற்குச் சிறந்த பயன் எனக் கொள்ளுதல் வேண்டும். நமது நாகரிகம் அனைத்திற்கும் அடிப்படையாகவுள்ள இலட்சியங்களை மானிடச் சமுதாயத்திற்குப் பாதுகாத்து வழங்குதலினாலே நம்மால் விரும்பிக் கற்கத் தகுவனவற்றுள், அது தலைசிறந்ததொன்றாகும்.

**விடை காண்போம்**

- இலக்கியத்தின் தன்மை என்ன?
- இலக்கியத்தின் சிறப்பியல்புகள் யாவை?
- இலக்கியத்தின் அளவுகோல்கள் யாவை?
- இலக்கியத்தின் சிறந்த பயனாவது எது?

### சுருக்கி வரைவோம்

கீழ்க்காணும் பகுதியைப் பத்து வாக்கியங்களில் சுருக்கி எழுதுவோம்.

எழுதுவதெல்லாம் இலக்கியமாகி விடுமா? மின்னுவதெல்லாம் பொன்னாகவா மாறிவிடுகிறது? இல்லையே! அது போல்வதுதான் இலக்கியமும் என்க. இலக்கியம் செய்யுளிலும் அமையலாம்; உரைநடையிலும் அமையலாம். எவ்வடிவில் அமையினும், படிப்போர் இதயத்தைக் கவரும் வண்ணம் இலக்கியம் இலங்க வேண்டும்.

"ஒருவன் மொழியைக் கொண்டு தன் உள்ளத்தில் உண்டான உணர்ச்சிகளைப் பிறர் உள்ளத்திலும் உண்டாகுமாறு செய்விக்கும்" நூல் இலக்கியம் ஆகும். "ஒருவன் தன் அனுபவத்தைக் கற்பனைமூலம் எண்ணிப்பார்த்து, செய்யுள் நடையினாலோ உரைநடையினாலோ பிறர் உள்ளத்திலும் எழுமாறு அழகு படச் செய்வதே இலக்கியமாகும்" என்னும் கலைக்களஞ்சியத்தில் காணப்படும் இலக்கியவிளக்கம் ஈண்டுக் கருதத்தக்கது. உணர்ச்சியும் கற்பனையும் இன்றேல் அஃது இலக்கியமாய் இராது. 'வெற்று எழுத்துக் குவியலாய்'த்தான் இருக்கும்.

இவற்றுக்கும் மேலாக, இலக்கியத்தை மதிப்பீடு செய்யும் உரைகல் ஒன்று உள்ளது. அதுதான் 'காலத்தை வெல்லும்' ஆற்றல். காலத்தை வெல்லும் இலக்கியத்தைப் படைப்பவனே உண்மையான இலக்கிய கர்த்தா ஆவான். அத்தகையோன் படைக்கும் இலக்கியம், காலவெள்ளத்தைக் கடந்து நீடுழி நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை. இலக்கியங்கள் என்பவை, நீண்ட நெடுங்காலம் நிலைத்து நிற்பவை; மக்களால் படிக்கப்படுகின்றவை; பாராட்டப்படுகின்றவை. போலி இலக்கியங்கள் நிலைத்து நில்லா.

## வாசித்துக் கருத்தறிவோம்

### திருக்குறளும் தம்மபதமும்

தம்மபதம் பௌத்த சமய அறநூல். இது புத்த பெருமான் அருளிய அறநெறியை உணர்த்துகிறது. கருத்துகளைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் உவமைச்சுவை தோன்றவும் எடுத்துரைக்கிறது. இதில் உள்ள செய்யுள்கள் இரட்டைக் கருத்து அமைப்பினை உடையன. இந்நூல் திருக்குறளைப் போலச் சிறப்பு வாய்ந்தது. இவ்விரு நூல்களுக்கும் இடையே ஒத்த கருத்துகளாகப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரே கருத்தை உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் கற்போர் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு உணர்த்தும் திறன் தம்மபதத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டு:

“கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள் மழைநீர் பாய்வது போல நன்னெறிப் பயிற்சியில்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்து விடுகின்றன”.

“கூரை செம்மையாக வேயப்பட்ட வீட்டினுள் மழைநீர் இறங்காதது போல நன்னெறிப் பயிற்சியுள்ள மனத்தினுள் ஆசைகள் நுழைய முடியாது”.

இவ்வாறு உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் ஒரு கருத்தைப் புலப்படுத்தும் திறனைத் தம்மபதத்தில் காணலாம். திருக்குறளில்

“சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்”.

என்னும் குறட்பாவில் ஒரே கருத்தை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் புலப்படுத்தும் திறனைக் காணலாம்.

#### விடைகாண்போம்

- தம்மபதம் குறித்து நீவீர் அறிந்த கருத்துகள் யாவை?
- ஒரே கருத்தை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் புலப்படுத்தும் தம்மபதக் கருத்தைச் சுருக்கிக்கூறுக.
- “சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல்” என்னும் குறட்பாவில் காணும் உடன்பாட்டு, எதிர்மறை கவிதை இயல்பைத் தம்மபதத்தோடு பொருத்திக் காட்டுக.

## இலக்கண விளக்கம் பெறுவோம்

### வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம்

- வெண்பாவின் ஈற்றடி முச்சீர்களாகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் இருக்கும்.
- இயற்சீரும் வெண்சீரும் பயின்று வரும்.
- இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று வரும். (பிற தளைகள் வாரா).
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் ஒன்றைப் பெற்று முடியும்
- செப்பலோசை பெற்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை வரும்.
- ஒருவிகற்பமாகவோ – பலவிகற்பமாகவோ வரும்.

**வெண்பா ஐந்து வகைப்படும் அவை:**

- குறள் வெண்பா
- சிந்தியல் வெண்பா
- நேரிசை வெண்பா
- இன்னிசை வெண்பா
- பஃறொடை வெண்பா என்பன.

### குறள் வெண்பா

திருக்குறள் – குறள் வெண்பா வகையைச் சார்ந்ததாகும்.

வெண்பாவின் பொது இலக்கணத்தோடு, இரண்டடிகள் பெற்று வருவது குறள் வெண்பாவாகும்.

(எ.டு) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இக்குறள் வெண்பா முதலடியின் முதற்சீரும் இரண்டாமடியின் முதற்சீரும் ஒரே எதுகையைப் பெற்று வந்தமையால் ஒருவிகற்பக் குறள் வெண்பா எனப்படும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

இக்குறள் வெண்பாவில் முதலடியின் முதற்சீரும் இரண்டாம் அடியின் முதற்சீரும் எதுகை ஒன்றாக அமையாது இரண்டு விதமாக அமைந்துள்ளமையால் இருவிகற்பக் குறள் வெண்பா எனப்படும்.

### நேரிசை வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நான்கடிகளாய், இரண்டாம் அடியின் இறுதிச்சீர் தனிச் சொல் பெற்று வருவது நேரிசை வெண்பா

எனப்படும். இதுவும் ஒருவிகற்ப நேரிசை வெண்பா, இரு விகற்ப நேரிசை வெண்பா பல விகர்ப்ப நேரிசை வெண்பா என அமையும்.

(எ.டு) மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதார் - நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

வெண்பாவிற்குரிய இலக்கணம் பெற்று நான்கு அடிகளாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று நான்கடிகளிலும் ஒரே எதுகைப் பெற்றுள்ளமையால் இஃது ஒருவிகற்ப நேரிசை வெண்பா எனப்படும்.

### இருவிகற்ப நேரிசை வெண்பா

(எ.டு) சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி

நேரிசை வெண்பாவிற்குரிய இலக்கணத்தைப் பெற்று முதலிரண்டு அடிகளில் முதற்சீர் ஓர் எதுகையாகவும் பின் இரண்டு அடிகளில் முதற்சீர் வேறோர் எதுகையாகவும் வந்துள்ளமையால் இஃது இருவிகற்ப நேரிசை வெண்பா எனப்படும்.

### ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

- அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும்
- பெரும்பாலும் ஈரசைச் சீர்களாகிய மாச்சீர் - விளச்சீர் (ஆசிரிய உரிசீர்கள்) பெற்று வரும்.
- வஞ்சி உரிச்சீர்கள் வாரா.
- நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் மிகுந்து வரும்; பிற தளைகளும் வரும்.
- குறைந்தது மூன்றடிகள் கொண்டும், மிகுதியாக பாடுவோரின் எண்ணப்படி மிக்கும் வரும்.
- ஈற்றடியின் இறுதிச்சீர் ஏ,ஐ,ஓ,ஈ,ஆய்,என் - என்னும் அசைகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்; ஏகாரத்தால் முடிவதே சிறப்பாகும்.
- அகவல் ஓசை பெற்று வரும்.

அகவல் ஓசை உடையதால் அகவற்பா எனவும் பெயர் பெறும்.

### ஆசிரியப்பாவின் வகைகள்

- நேரிசை ஆசிரியப்பா
- நிலைமண்டில ஆசிரியப்பா
- இணைக்குறள் ஆசிரியப்பா
- அடிமறிமண்டில ஆசிரியப்பா

### நேரிசை ஆசிரியப்பா

(எ.டு) ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

இச்செய்யுள் ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணம் பெற்று, ஈற்றியலடி மூன்று சீர்கள், ஏனைய அடிகள் நான்கு சீர்கள் பெற்று வருவதனால் இது நேரிசை ஆசிரியப்பா எனப்படும்.

### விடை காண்போம்

- வெண்பாவின் பொதுஇலக்கணம் தருக.
- குறள் வெண்பாவைச் சான்று தந்து விளக்குக.
- ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.
- நேரிசை ஆசிரியப்பாவைச் சான்றுடன் விளக்குக.